# இணையதள விடுதி, பொது சேவை மையம் மற்றும் மின் வணிகச் சேவை வர்த்தகத்தில் எப்படி வெற்றிகரமாக திகழ்வது?

## இணையதள விடுதி, பொது சேவை மையம், மின் வணிகச் சேவை வர்த்தகத்திற்கான வழிகாட்டி

பொருளடக்கம்


அத்தியாயம் 1 : முகவுரை

**அத்தியாயம் 2 : இணையதள விடுதியை வெற்றிகரமாக நடத்துவது எப்படி?**

- இணையதள விடுதி சுகாதாரம்
- வன்பொருள் நலவியல்
- இணையதள விடுதி மேலாண்மை
- இணையதள விடுதி கண்காணிப்பு/பாதுகாப்பு அமைப்பு
- இணையதள விடுதி முன்னேற்றம்
- வாடிக்கையாளரின் சிறந்த அனுபவம்

**அத்தியாயம் 3 : புதிய பொருள் ஈட்டும் வாய்ப்புகளை எப்படி உருவாக்குவது?**

- வழங்கப்படும் சேவையை அதிகரித்தல்
- வாடிக்கையாளர் தொடர்பை அதிகரித்தல்
- முதன் முறை பயன்படுத்துவோர்
- தொழில் முனைவோர் மற்றும் தொழில் முறையாளர்
- பொழுது போக்கை நாடுபவர்கள்
- கணினி விளையாட்டு ஆர்வலர்கள்
- மாணவர்கள்
- மென்பொருள் உருவாக்குபவர்கள்

## அத்தியாயம் 1 : முகவுரை

இணைய தள உலகில் 'இந்திய மாதிரிக்கு' பணத்திற்கான மதிப்பு, 'பயன்பாட்டுக்கு பணம் செலுத்து' என்ற அடிப்படையில் இயங்குவதால் வருமானம் இணக்கமாக உள்ளது. இந்தியாவில் இணைய தளத்திற்குள் நுழைய விலை (ஒரு மணிக்கு ரூ.10/15/20) என்பதற்கு சிறந்த உதாரணம் இங்குள்ள இணைய தள விடுதிகள் மற்றும் பொது சேவை மையங்களே ஆகும்.

ஆயினும், இன்றைய தினம் இணைய தள விடுதிகள் அழிவை நோக்கி செல்கிறது என்றும் இவ்வர்த்தகத்திற்கு எதிர்காலம் இல்லை என்ற கருத்துமே நிலவுகிறது. இந்தியாவில் இணைய தள வளர்ச்சி குறைவாக இருப்பதும், இணைய தள வாடிக்கையாளர்கள் வீழ்ச்சியும், வருவாய் குறைவதும் மற்றும், அரசாங்கம் இத்துறையில் விட்டேத்தியாக இருப்பதும் இக்கூற்றை நிருபிக்கிறது.

இவ்வளவு சவால்கள் இருந்த போதும், 36 சதவிகிதத்திற்கும் மேலான இந்தியர்கள் இணைய தள விடுதிகளை நாடுவது மூலம் இவர்கள் இந்திய இணைய தள சூழலியலில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள்.

15 வயது முதல் 40 வயது வரை உள்ளவர்களே இணைய தள விடுதிக்கு அடிக்கடி வருவதாகவும் அதில் 40 சதவிகிதத்திற்கும் மேலானவர்கள் தொழில் முறையாளர்கள் என்பதையும் ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. மேலும், இருப்பிடத்திற்கு அருகாமையில் வசதியாக வாரத்தின் ஏழு நாட்களும் நீண்ட நேரம் திறந்திருப்பதால் அனைவராலும் இணைய தள விடுதியை சுலபமாக அணுக முடிகிறது.

மேற்கூறிய இத்தனை அம்சங்களும் இத்தொழிலுக்கு மெருகேற்றுகின்றன. மின்னாளுகை-27 என்ற குறிக்கோளுடனான திட்டத்தை நோக்கிய பார்வையுடன், வாடிக்கையாளர் உள்ளுணர்வு, ஆதரவு மற்றும் வழிகாட்டுதல் இருந்தால் இணைய தள விடுதிகளை, இணைய தளத்தை அளாவுவதற்கு மட்டும் வந்து செல்லும் இடமாக கருதாமல் சமுதாயத்தின் அனைத்து தரப்பையும் சார்ந்த எல்லா வயது மக்களும் தங்களின் தேவைகளாகிய பிறப்பு சான்றிதழ், கல்வித் தேவை, பயணத்திட்டம், மின் கட்டணம் போன்ற பொதுச்சேவைகளை பூர்த்தி செய்யும் இடமாக கருதுவார்கள்.

வசதியான சூழல், விடுதி மேலாண்மை மென்பொருள் மற்றும் சட்டபூர்வமான மென்பொருளை பயன்படுத்துவது, பாதுகாப்பு அமைப்புகளை உருவாக்குவது போன்ற

செயல்கள், இணைய தள விடுதியை திருட்டு ஏதும் இல்லாமல் பாதுகாப்பாகவும் குறிப்பாக சட்டபூர்வமாகவும் நடத்தி செல்ல பெரிதும் உதவுகிறது.

கல்விச் சேவைகள் (கணிணி கல்வி, ஆங்கிலம் பேசுதல், தனிப் பயிற்சி, தொலை தூரக் கல்வி), மின்னாளுகை சேவைகள், பயணச் சேவைகள், பொது பயன்பாட்டுச் சேவைகள் (கட்டணம் செலுத்துதல்), தனியார் அஞ்சல் சேவைகள் போன்றவற்றை அறிமுகப்படுத்துவதால் இணைய தள விடுதிக்கு வந்து கணிணி பயன்படுத்துவோரின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம்.

இந்திய இணைய தள விடுதி சங்கத்தில் (CCAOI) உள்ள நாங்கள், இச்சங்கத்தின் மூலமாக சமீபத்திய வளர்ச்சிக்கு ஏற்ற தகவல்களுடன் தீர்வுகளையும், சேவைகளுடன் சிறந்த செயல் முறைகளையும் அளித்து, இச்சங்கத்தை செழுமையாக வளர்ப்பது மூலமாக இந்தியாவில் இணைய தள வசதிகள் பெருகவும் முழு முயற்சியோடு ஈடுபட்டுள்ளோம்.

## அத்தியாயம் 2 : இணையதள விடுதியை வெற்றிகரமாக நடத்துவது எப்படி?

உங்கள் இயக்கச் செலவை குறைத்து வாடிக்கையாளர்களுக்கு சிறந்த மதிப்பை அளித்து இலாபத்தை பெருக்குவதே வியாபாரத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கான வழியாகும். உங்கள் வாடிக்கையாளர்களின் தேவையை உணர்ந்து அவர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்தால், அவர்கள் உங்களை மறுபடியும் நாடி வருவது உறுதி.

இணையதள விடுதியை வெற்றிகரமாக நடத்துவதுதற்கான ஒரு சில வழிமுறைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

### அ. விடுதி சுகாதாரம்

முதலாவதாக நீங்கள் இணையதள விடுதி உரிமையாளர் என்ற முறையில் விடுதி சுகாதாரத்தை கவனத்தில் கொள்வது மிகவும் அவசியம். சுத்தம், தூய்மை மற்றும் வசதியான விடுதியே அதிக வாடிக்கையாளர்களை கவரும். வசதியான இருக்கைகள், நல்ல வெளிச்சம், போதிய குளிர்ச்சி ஆகியவற்றை உறுதி செய்தால் வாடிக்கையாளர்கள் நீண்ட நேரம் இருப்பதற்கும் அதிக வருமானத்திற்கும் வாய்ப்பு அதிகம். அனைத்து தரப்பினரும் விடுதியினுள் வருமளவுக்கு வெளிப்புறம் சரியாக பராமரிக்கப்பட்டு பாதுகாப்பான சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

### ஆ. வன்பொருள் நலவியல்

உங்கள் இணையதள விடுதிக்கு வரும் ஒவ்வொருவரும் உங்கள் கணினி துண்டிப்பு ஏதும் இல்லாமல் தொடர்பில் இருக்க வேண்டும் என்றுதான் எதிர்பார்ப்பார்கள். அவ்வாறு கணினி இயங்காமல் போனால் நீங்கள் வருமானத்தை இழப்பதோடு வாடிக்கையாளரையும் இழந்து விடுவீர்கள். ஒழுங்காக இயங்கக்கூடிய கணினியையும் சரியான இணையதள தொடர்பையும் சார்ந்துதான் உங்கள் வெற்றி உள்ளது.

**வன்பொருள் பாதுகாப்பு**

உங்களின் வன்பொருள் வைரஸ், மென்பொருள் திருட்டு, மென்பொருள் ஊடுருவல் போன்றவற்றை எதிர்க்கவல்லதாக இருக்க வேண்டும். உங்கள் கணினியில் தரமான உண்மையான மென்பொருள் பயன்படுத்துவதன் மூலம் சமீபத்திய வளர்ச்சிக்கு ஏற்ப நிகழ்நிலைப்படுத்தும் வசதியும் சிறந்த ஆதரவும் பெறலாம்.

**மேலும் உங்கள் வன்பொருளை இவ்வாறு பாதுகாக்கலாம் :**

- தீச்சுவர், நச்செதிர்ப்பி, மற்றும் உளவுநிரல் போன்றவற்றை அனைத்து கணினிகளிலும் நிறுவலாம்.
- இணையத்திலிருந்து சமீபத்திய பாதுகாப்பு மென்பொருட்களை தானாக கீழிறக்கம் செய்து நிறுவும் வண்ணம் கணினிகளை ஏற்பாடு செய்யலாம்.
- தவறாமல் தற்காலிக கோப்புகளை அகற்றுவதோடு வைரஸ் அகற்றுவதற்கான சோதனைகளையும் மேற்கொள்ள வேண்டும்.
- அபாயகரமான இணைய தள முகவரிகளை தடுத்தல்.
- தேவையற்ற கோப்புகளின் வரலாற்றினை அவ்வப்போது அகற்றுதல்.

**விடுதியில் மென்பொருள் வன்பொருள் மற்றும் பயன்பாடுகளை முறையாக வழங்குதல்**

உங்களின் வியாபாரத்தை, வரவு செலவு திட்டம்தான் நிர்ணயிக்கிறது. எனினும், மென்பொருள் வன்பொருள் மற்றும் பயன்பாடுகள் போன்றவை அடிப்படை தேவைகளாகின்றன.

**பொதுவாக ஒவ்வொரு கணினியிலும் இருக்க வேண்டிய வசதிகள்**

**மென்பொருள்**

- பாதுகாப்பையும் நம்பிக்கையையும் தரக்கூடிய தரமான மைக்ரோசாப்ட் வின்டோஸ் போன்ற இயக்க அமைப்பு.

- வாடிக்கையாளர்களை கவர்வதற்கு அனைவராலும் பயன்படுத்தப்படும் உரிமம் பெற்ற மைக்ரோசாப்ட் அலுவலகம் அல்லது அதற்கு இணையான மென்பொருள்.

**வன்பொருள்**

- **நுண்செயலகம்** : வேகமான செயலகத்தை பொருத்துவதன் மூலம் உங்கள் வாடிக்கையாளர் வலைப்பக்கத்தை வேகமாக பார்க்கவும், கோப்புகளை கீழிறக்கம் செய்யவும், பயன்பாடுகளை இயக்கவும் ஏதுவாக இருக்கும். 1 GHz 32-bit (x86) or 64-bit (x64) செயலகங்கள் உங்கள் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த அனுபவத்தை கொடுக்கும். மாற்றாக 800 MHz நவீன செயலகங்களையும் பயன்படுத்தலாம்.

- **வன்வட்டு இயக்கி** : உங்கள் கணினியின் வன்வட்டில் மென்பொருட்களை சேமிக்கவும் அதனுடன் உங்கள் வாடிக்கையாளர்களின் இயக்கத்திற்காகவும் போதிய இடம் இருக்க வேண்டும்.

- **நினைவகம்** : உங்கள் கணினியில் அதிக வேகமும் நினைவகமும் இருந்தால் வாடிக்கையாளர்கள் வேகமாக செயல்பட முடியும். நிரல்களை விரைவாக ஏற்றும் சாதகமும் நமக்கு கிடைக்கும். ஒவ்வொரு கணினியிலும் குறைந்தது 512 MB அளவுடைய நினைவகம் இருக்க வேண்டும்.

- **திரையகம்** : முடிந்தால் தட்டை திரைகளை தெரிவு செய்யலாம். ஒரு சில வாடிக்கையாளர்கள் பெரிய விளையாட்டுகளை விளையாடுவதற்கான பெரிய திரைக்காக அதிகப் பணம் கொடுக்க தயாராக இருந்தாலும், பொதுவாக விரும்பப்படுவது 17 அல்லது 19 அங்குல திரைகளே.
  எதிர்முனை கதிர்க் குழல் (CRT) திரைகள் விலை குறைவாக இருந்தாலும் அவை நினைவகம் இல்லாமலும் பெரிய இடத்தையும் அடைத்துக் கொள்ளும்.

- **100 Mbps வலையமைப்பு வடம்** : இந்த வலையமைப்பு வடம் (network cord) கணினிக்கு தகவல்கள் செல்லும் வேகத்தை அதிகரிக்கும். மேலும் கோப்புகளை பகிர்ந்து கொள்ளவும், அச்சுப்பொறிக்கு அனுப்பவும், குரல்வழி தொடர்புக்கும் பெரிதும் பயன்படுகிறது. இதனால் வாடிக்கையாளர்கள்

நெடுந்தொலைவில் உள்ள நண்பர்களை குறைந்த செலவில் அழைத்து பேச முடியும்.

- **ஒளித் தோற்ற வடம்** : நாம் ஒலி ஒளி காட்சிகளை பார்க்கும்போதும், கணினியில் விளையாடும்போதும் நமது பார்வைக்குரிய செயல்களை கட்டுப்படுத்துவது, வாடிக்கையாளர்களுக்கு சிறந்த அனுபவத்தை தருவது இவ்வடங்களே ஆகும்.

- **ஒலி வடம்** : விடுதியில் ஒலிபெருக்கிகளை அமைக்க விரும்ப மாட்டீர்கள் என்றாலும் வாடிக்கையாளர்கள் படங்களை பார்ப்பதற்கும், பாடல்களை கேட்பதற்கும் நண்பர்களை அழைத்து பேசுவதற்கும் இந்த ஒலி வடங்கள் பயன்படுகின்றன.

- **பயன்பாடுகள்**
  பல் ஊடக சாவிப்பலகை மற்றும் ஒளியியல் சுண்டெலி : ஒளியியல் சுண்டெலி செயல்பாட்டை அதிகரிக்கும். வாடிக்கையாளர்கள் இசை மற்றும் ஒலி ஒளி காட்சிகளை அணுகும் செயல்முறையை பல் ஊடக சாவிப்பலகை எளிதாக்கும்.

## இ. விடுதி மேலாண்மை

அன்றாட உற்பத்தி திறன், நாட்பதிவேட்டை நிர்வகித்தல், கட்டணச் சேவை, போன்றவற்றை கண்காணித்து விடுதியை ஒழுங்காக முறையில் நடத்திச் செல்ல நம்பிக்கையான விடுதி மேலாண்மை மென்பொருள் உங்களுக்கு தேவைப்படும். விடுதியை சிறப்பாக நிர்வகிக்கவும், திருட்டை தடுக்கவும், வாடிக்கையாளர்களுக்கு தாங்கள் ஏமாற்றப்படவில்லை என்ற நம்பிக்கையை உண்டாக்கவும் சிறந்த விடுதி மேலாண்மை மென்பொருள் உதவி புரிகிறது.

**சிறந்த கட்டண முறை உங்களுக்கு தருபவை :**

- இலகுவான கட்டண வீதம், வாடகை விலை
- நிர்வாக தகவல் பலகை மூலம் அனைத்து கணினிகளையும் விரைந்து நிகழ்நிலைப்படுத்தல்
- சிறந்த வியாபார முடிவுகளுக்கு உதவி செய்ய முன் நிறுவ அறிக்கை

## ஈ. இணையதள விடுதி கண்காணிப்பு/பாதுகாப்பு அமைப்பு

தேசிய பாதுகாப்புக்காக விழித்திருக்கும் வேளையில் இணையதள விடுதிக்கு வலிமையான பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு அமைப்பு அவசியத் தேவையாகிறது. இணையதள விடுதிக்கான சிறந்த கண்காணிப்பு அமைப்பு ஏற்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளர்களின் தகவல்களை சிறப்பாக பராமரித்து நிர்வகிக்க முடியும். இதனால் தேவையற்ற தவறான நோக்குடைய மக்களை தவிர்த்து உண்மையான வாடிக்கையாளர்களை கண்டறிந்து அவர்களுக்கு பாதுகாப்பான உணர்வு அளிக்க முடியும்.

**நினைவில் கொள்ள வேண்டியவை**

- அனைத்து கணினிகளின் வடிவாக்கமும் ஒரே மாதிரி இருக்க வேண்டும். இதனால் பராமரிப்பு சுலபமாவதோடு சீரான உணர்வு தோன்றும்.
- கணினிகளையும், அடிக்கடி பயன்படுத்தப்படும் நிரல்களை உடனுக்குடன் நிகழ்நிலைப்படுத்த வேண்டும்.
- இணைய தள விடுதிக்கான அடிப்படை பயன்பாடுகள் பின்வருமாறு:

    அச்சுப்பொறி
    வருடி
    வலை புகைப்படக்கருவி
    ஒலி கேட்க காதில் அணியும் கருவி, ஒலிவாங்கி
    யு.எஸ்.பி நினைவக கணிப்பான் மற்றும் பல்வேறு தரவு வடம்
    CD-RW அல்லது DVD பர்னர்
    தடையில்லாத மின் விநியோகம் (UPS)
    வசதியான இருக்கைகள்
    உயர்தர ஒளி வசதிகள்
    இணைய தள விடுதிகளை குளிர்ச்சியாக வைத்திருத்தல்

## உ. இணையதள விடுதி முன்னேற்றம்

எந்த ஒரு விற்பனை யுக்தியும் வெற்றி பெறுவது விரிவான திட்டம் தீட்டுவதிலும் அதை செயல்படுத்துவதிலும்தான் உள்ளது. விற்பனையை முன்னேற்றவதற்காக புதிதான வாடிக்கையாளர்களை கவர்வது மட்டுமின்றி உள்ள வாடிக்கையாளர்களையும் தக்க வைத்துக்கொள்ள ஒரு சிறந்த திட்டம் வேண்டும். இந்த போட்டி உலகில் உங்களை

தனித்து காட்டுவதற்கும், நன்றாக பேசி வாடிக்கையாளர்களை கவர்வதற்கும் சிறந்த திட்டம் அவசியமாகிறது.

உங்கள் விடுதியை முன்னேற்றுவதற்கான செயல்முறைகளை துவங்குவதற்கு முன், உங்களை நாடி வரும் வாடிக்கையாளர்கள் மற்றும் அவர்கள் சார்ந்த பகுதிகள் பற்றிய ஒருங்கிணைந்த கருத்துகள் தேவை. அப்பகுதியில் உள்ள வீடுகள், கல்விக்கூடங்கள், மருத்துவமனைகள், சந்தைகள்பற்றிய விரிவான புரிதல் இருந்தால், வாடிக்கையாளர்களின் தேவையை புரிந்து கொண்டு சரியான வியாபார யுக்தியை தேர்ந்தெடுத்து வியாபாரத்தை வெற்றிகரமாக நடத்தலாம்.

உங்கள் வாடிக்கையாளர்களை நன்றாக புரிந்து கொண்டு அவர்களை வகைப்படுத்துவதன் மூலம் அவர்களுக்கான பிரத்யேகமான திட்டங்களை செயல்படுத்தி வெற்றியின் விகிதத்தை உயர்த்தி கொள்ளலாம்.

உங்களை நாடி வரும் வாடிக்கையாளர்கள் மற்றும் அவர்கள் சார்ந்த பகுதிகளை பொருத்து உங்கள் வியாபார முன்னேற்றத்திற்கான திட்டங்களை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். நாங்கள், உங்கள் வியாபார முன்னேற்றத்திற்கான ஒரு சில வழிமுறைகளை இங்கே கொடுத்துள்ளோம்.

- **சலுகை** : வியாபார முன்னேற்றத்திற்காக, வாடிக்கையாளர்களை பொருத்து, மாணவர்கள், மூத்த குடிமக்கள், இல்லத்தரசிகள் என வகைப்படுத்தி பல சலுகைகள் வழங்கலாம்.
- **உறுப்பினர் சேர்க்கை** : தற்போது உள்ள வாடிக்கையாளர்களுக்கு குடும்ப உறுப்பினர் சேர்க்கை, சோதனை அடிப்படையிலான இலவச உறுப்பினர் சேர்க்கை போன்ற திட்டங்களை அறிமுகப்படுத்தலாம். இது வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை பெருக்கும்.
- உள்ளூரில் பிற வியாபாரிகளுடன் இணைந்து விளம்பரம் செய்தால் புதிய வாடிக்கையாளர்கள் கிடைக்கும் வாய்ப்பு உண்டாகும்.
- பிரத்யேகமான மின்னஞ்சல் செய்திகள், துண்டு வெளியீடுகள், மற்றும் பிரச்சார கையேடுகள் போன்றவற்றை முறையாக விநியோகம் செய்தால் புதிதான வாடிக்கையாளர்களை விடுதியை நோக்கி கவரமுடியும்.

- உள்ளூர் செய்தித்தாள்கள், பத்திரிக்கைகள், வானொலி மற்றும் சமூக பத்திரிக்கைகள் மூலம் விளம்பரம் செய்து சமூகத்திற்கு உங்களைப்பற்றி தெரியப்படுத்தலாம்.
- விடுதிக்கு பலமுறை வரும் வாடிக்கையாளர்களுக்கு சலுகை படிவங்களை வழங்கி ஊக்கப்படுத்தலாம். இவர்களுக்காக உறுப்பினர் சங்கத்தை உருவாக்கலாம் அல்லது அவர்களுக்கான (இந்த மாதத்தின் சிறந்த வாடிக்கையாளர் என்பது போன்ற) போட்டி வைத்து வெகுமதி வழங்கலாம்.

**ஊ. சிறந்த வாடிக்கையாளர்களின் அனுபவங்கள்**

வாடிக்கையாளர்கள் சிறந்த அனுபவத்தை கொண்டால் அவர்கள் திரும்ப திரும்ப உங்கள் விடுதிக்கு வர விரும்புவார்கள். இதற்காக பல்வேறு வழிமுறைகளை கையாளலாம். மிக முக்கியமாக, இணைய தள சேவையில் அவர்களுக்கு தேவையானதை உங்கள் விடுதி மூலம் நினைத்த நேரத்தில் அவர்களால் பெற முடியும் என்ற உறுதியை கொடுப்பதே சிறந்ததாகும்.

**சில ஆலோசனைகள்**

- கணினிகள் மற்றும் இணையதள சேவைகளை பயன்படுத்தும்போது ஏற்படும் சில பிரச்னைகளை தீர்த்து வைக்க உதவிக்கரம் நீட்டுங்கள்.
- அனைத்து கணினிகளிலும் இணையதள மேலோடிகளில்(பிரௌசர்) செய்தி, இசை, சினிமா, விளையாட்டு, கல்வி, சமையல் போன்ற முதன்மை சொற்களை கொடுத்து விருப்ப பட்டியலை உருவாக்குதல்.
- உடன் நிகழ் வேலைக்கான பட்டியலை தயாரித்தல்.
- செல்லிடபேசியின் மின்னேற்றத்திற்கான வசதிகளை செய்தல்.
- கழிப்பறைகள் சுத்தமாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- சிறு திண்பண்டங்கள், குளிர் பானங்கள் போன்றவற்றை ஏற்பாடு செய்யலாம்.

இதில் அடிப்படை கருத்து என்னவென்றால், வாடிக்கையாளர்களுக்கு தேவையானதையெல்லாம் கொடுத்து அவர்கள் வசதியாக உணரும் வண்ணம் செய்தால் அவர்கள் நீண்ட நேரம் இருந்து பணம் செலவழிக்க தயங்க மாட்டார்கள்.

## அத்தியாயம் 3 : வருமானம் ஈட்டும் புதிய வாய்ப்புகளை எப்படி உருவாக்குவது?

இணைய தள விடுதியை வெற்றிகரமாக நடத்துவதற்கு, இணைய தளத்தை தொடர்பு கொள்ள செய்து தரும் வசதிக்கும் மேலாக உங்களுடன் நீண்ட நேரம் செலவழித்து நிறைய வருமானம் ஈட்டுவதையும் உறுதி செய்ய வேண்டும்.
பல தயாரிப்புகளை விற்பதன் மூலம் புதிய வாடிக்கையாளர்களை நாள்முழுவதும் கவர்ந்து உங்களின் வருமானத்திற்கான ஆதாரத்தை பெருக்கிக்கொள்ள முடியும்

### அ. உங்களின் சேவையை அதிகரித்தல்(மதிப்பு கூட்டிய சேவை)

பல்வேறு விதமான சேவைகளையும் தயாரிப்புகளையும் வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர்களை கவர்வதோடு தக்க வைத்துக்கொள்ள முடியும். ஒவ்வொருவரின் குறிப்பிட்ட தேவையையும் பூர்த்தி செய்யும் சேவைகளை கொடுக்க வேண்டும்.

முதல் முறை பயன்படுத்துவோர், மாணவர்கள், கணினியில் விளையாடுபவர்கள், தொழில் முனைவோர் மற்றும் ஊடக ஆர்வலர்கள் என்று பல்விதமான வாடிக்கையாளர்கள் வருவார்கள். இணையதள சேவையை பயன்படுத்த, தயாரிப்புகளை வாங்க என்று வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை கூட்டும்போது வருமானத்திற்கான வாய்ப்பும் அதிகரிக்கும்.

உங்கள் வியாபாரத்தில் அதிக வருமானம் ஈட்டும் வாய்ப்புகளுக்கான சில ஆலோசனைகள் :

- **மடிக்கணினி பயன்படுத்துவோர்க்கான பிரத்யேகமான தலங்களையும் கடவுச்சொல் மூலம் பாதுகாக்கப்பட்ட வை-பை மண்டலங்களையும் உருவாக்குதல்**
  மாநகரங்களில் உள்ள இணைய தள விடுதிகளில் சொந்த மடிக்கணினியை பயன்படுத்த விரும்பும் மாணவர்கள் மற்றும் தொழில் முறையாளர்களை கவர வை-பை சேவைகளை வழங்க வேண்டும்.
  வரவேற்கத்தக்க இதமான சூழலை உருவாக்கி வாடிக்கையாளர்களை வசதியாக உணர வைத்தால் அவர்கள் திரும்ப திரும்ப நாடி வருவார்கள். மதிப்பு கூடிய பயன்களாகிய மென்பொருள் பயன்பாடுகளை வழங்குவதுடன் பலமுறை விடுதிக்கு வரும் வாடிக்கையாளர்களை ஊக்கப்படுத்தும் விதமாக தின/வார/மாத அடிப்படையில் கட்டணத்தில் சலுகை அளிக்கலாம்.

- **கணினி உதவி வழங்குதல்**

உங்களுடைய கணினிகளை பராமரிப்பது மட்டுமல்லாமல், வாடிக்கையாளர்களின் இல்லத்தில் உள்ள கணினி தேவைக்கும், புதிதாக கணினி வாங்குபவர்களுக்குமான ஆலோசனை வழங்குவது பற்றியும் கருத்தில் கொள்ளலாம். நிகழ்நிலைப்படுத்தல், தரவு மீட்பது, நிறுவல், உருவாக்குதல் போன்ற சேவைகளில் அதிக வருமானம் வரும் வாய்ப்பு அதிகம்.

- **வணிக கடிதப் போக்குவரத்து மற்றும் கணினி வழி காட்சிச் சேவை**
  வாடிக்கையாளர்கள், வியாபார தயாரிப்புகளாகிய பதாகைகள், கையேடுகள், துண்டு பிரதிகள், வர்த்தக கடிதங்கள், வியாபார அட்டைகள் போன்றவற்றை தொழில் முறை தோற்றம் தரும் வகையில் உருவாக்க சுலபமாக பயன்படுத்தத் தக்க முன்வடிவுகளையும் ஆயத்த படங்களையும் வழங்க வேண்டும். வாடிக்கையாளர்களுக்கான நிகழ்த்துக் காட்சிகளை உருவாக்குவதன் மூலம் புதிய வருமான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

- **அச்சிடுதல், தொலை நகல் எடுத்தல் மற்றும் வருடுதல்**
  அச்சேற்றுதல், நகலெடுத்தல், தொலை நகலெடுத்தல், பிணைத்தல்(பைண்டிங்), வருடுதல்(ஸ்கேன்) போன்ற வியாபார சேவைகளை வழங்குவதோடு அலுவலக பணிக்கு தேவையான பொருட்களையும் விற்கலாம்.

- **சுயகுறிப்பு, மேலுறைக் கடிதம் தயாரித்தல்**
  இணைய தள விடுதிக்கு, அதிகமானோர் வேலைக்கான வலை தளங்களை நாடியே வருகின்றனர். அவர்களின் வேலை தேடலுக்கான சுயகுறிப்புகளையும் தொகுப்புகளையும் உருவாக்க, முன் வடிவுகளையும் தொழில் முறை சேவையையும் வழங்கலாம். நீங்கள் உங்கள் பகுதி எழுத்தாளர்களுடனோ அல்லது வியாபாரிகளுடனோ இணைந்து கொண்டு இச்சேவையை வழங்கி வருமானத்தை பகிர்ந்து கொள்ளலாம். அல்லது இதற்கென வேலையாட்களை நியமித்து அவர்கள் உதவியுடன் இந்த ஆவணங்களை உருவாக்கலாம்.

- **கலாச்சார நிகழ்ச்சி மற்றும் கச்சேரிக்கான அனுமதி சீட்டு**
  கலாச்சார நிகழ்ச்சி, இசைக்கச்சேரி மற்றும் திரைப்படத்திற்கான அனுமதி சீட்டு விற்பது.

- **உணவு, குளிர்பானங்கள், பத்திரிக்கைகள் மற்றும் செய்தித்தாள்கள்**
  இக்கூடுதல் பொருட்கள் வரவேற்கத்தக்க சூழலை உருவாக்கி வாடிக்கையாளர்களை நீண்ட நேரம் தங்க வைக்க உதவும்.

- **சேகரிக்கும் பெட்டிகள் மற்றும் தனியார் அஞ்சல் சேவைகள்**
  தனியார் அஞ்சல் சேவை நிறுவனங்களுடன் இணைந்து அவற்றை சேகரிக்கும் பெட்டிகளை வைத்து வியாபாரத்தை நீட்டிக்கலாம்.

- **பொழுது போக்கு சேவைகள்**
  நீங்கள் இசை கோப்புகளை கீழிறக்கம் செய்தல், புகைப்படம் மற்றும் ஒளித்தோற்ற காட்சிகளை பகிர்ந்து கொள்ளுதல், பிரபலமான சமீபத்திய விளையாட்டுகள் உட்பட அலுவலக பொருட்களான குறுந்தட்டு(CD),எண்ணியல் ஒளித்தோற்ற வட்டு(DVD), பேனா இயக்கி, நினைவக அட்டைகள் மற்றும் அட்டை படிப்பி போன்றவற்றை விற்பது போன்ற சேவைகளை செய்யலாம்.

- **பொது பயன்பாடு மற்றும் பயணச்சீட்டு முன்பதிவு சேவைகள் வழங்குதல்**
  செல்லிட பேசி மின்னேற்றுதல், பொது பயன்பாட்டுச் சேவைகள், இரயில்/விமான பயணச்சீட்டு முன்பதிவு செய்தல் போன்றவை பெரும்பான்மையான மக்களை விடுதி/ பொது சேவை மையம் நோக்கி இழுக்கும்.

- **உடன்நிகழ் கல்விச் சேவைகள் வழங்குதல்**
  உடன்நிகழ் கல்வியினால் கணினியின் பயன்பாடு அதிகரிப்பதுடன் புதிய மாணவர்களை கவர்வது மூலமாக மந்தமான நேரங்களில் விடுதி/பொது சேவை மையத்தை கவனித்து கொள்ளும்.

- **நிதி ஏற்பாட்டுக்கான சேவைகள் வழங்குதல்**
  கடன் அட்டைகள், காப்பீட்டு சேவைகள் மற்றும் பங்குகள் வாங்குவதற்கான விண்ணப்பங்கள் அளிப்பது போன்ற சேவையினால் அதிக வருமானம் வரும் வாய்ப்பு ஏற்படும்.

**ஆ. உங்கள் வாடிக்கையாளர் தளத்தை அதிகரித்தல்**

உங்கள் வாடிக்கையாளர் தளத்தை அதிகரிக்க உங்களுடைய தற்போதைய வாடிக்கையாளர்கள் மறுபடியும் உங்களை நாடி வரும்படி செய்வது மட்டுமல்லாமல் புதிய வாடிக்கையாளர்களை சலுகையுடன் கூடிய சேவையை வழங்கி கவரும் வெற்றியையும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
வாடிக்கையாளர் தளத்தை விரிவுபடுத்துவது ஒன்றுதான் உங்களுக்கு மிகுதியான வருமானத்தை பெற்றுத்தரும் வாய்ப்புக்கு வழி வகுக்கும். பல்வேறு தரப்பட்ட

வாடிக்கையாளர்களின் தேவையை அறிந்து சேவை புரியும் போது கூடுதல் சேவைகளை கண்டறிந்து உங்கள் வியாபாரத்தை வெற்றிகரமாக்க முடியும்.

**பல்வேறு பகுதியைச் சார்ந்த வாடிக்கையாளர்கள் பற்றி இங்கே விவாதிப்போம்**

**முதன்முறை பயன்படுத்துவோர் :**

முதன்முறை பயன்படுத்துவோர் கணினிக்கும் இணைய தள சேவைக்கும் புதிதானவர்கள். அவர்கள் இணைய தள விடுதியை பயன்படுத்தி அவர்களின் குடும்பத்தினரையும் நண்பர்களையும் மின்னஞ்சல் மூலமாக தொடர்பு கொள்ளவும், உடன்நிகழ் வளங்களை பற்றி அறியவும் மிகவும் ஆர்வமாக இருப்பார்கள். இப்பகுதி மிகப் பெரியதாகவும் அளவற்ற திறமையை வெளிப்படுத்துவதாகவும் இருக்கும். உங்கள் வாடிக்கையாளர்களுக்கு தேவையான பயிற்சியையும் ஆதரவையும் அளிப்பதன் மூலம் கணினியில் பணி புரிய தேவையான அத்தியாவசிய திறமைகளை வளர்த்து கொள்ள அவர்களுக்கு உதவலாம். இம்மாதிரி செயல்கள் உங்கள் வர்த்தகத்திற்கு பலவழிகளில் உதவும். முதலாவதாக, வார நாட்களில் பெரும்பான்மையான இவ்வாடிக்கையாளர்கள் உங்கள் விடுதியை தேடி வருவதால் உங்களின் அனைத்து கணினிகளும் பயன்பாட்டில் இருக்கும். இரண்டாவதாக, உங்கள் பகுதியில் நீங்கள் இவ்வாடிக்கையாளர்களின் நம்பிக்கையான ஆலோசகராக கருதப்பட்டு அவர்களின் நம்பிக்கை மற்றும் வர்த்தகத்கை ஒருசேர கைப்பற்றுவீர்கள்.

**கீழ்க்கண்டவற்றை வழங்குவதன் மூலம் முதன்முறை பயன்பாட்டாளர்களை கவரலாம்**

- வசதியான நட்புடனான சூழல் - அதிக மக்களுக்கு, அதிலும் குறிப்பாக முதன்முறை பயன்படுத்துவோர்க்கு கணினி மற்றும் திறமைகளை கற்கும்போது மனஉளைச்சல் உண்டாகும் என்ற பயம் உள்ளது. இது போன்ற வாடிக்கையாளர்களுக்கு அவர்களை வசதியாக உணர வைக்க இயன்ற உதவிகளை செய்து ஊக்கமளிப்பதன் மூலம் திரும்பவும் விடுதிக்கு வரவைக்க முடியும்.

- அடிப்படை கணினி பயிற்சி – கணினி பயன்படுத்தும் முறை மற்றும் இணையதளத்தில் அடிப்படை தகவல்கள் சேகரிக்கும் முறை பற்றி கற்றுக்கொள்ளுதல் வாடிக்கையாளர்களுக்கு கணினியில் பயிற்சி துவங்க ஏதுவாக இருக்கும்.

- நீங்கள் குறிப்பிட்ட இணைய தள பயிற்சி நடத்துவதால், வாடிக்கையாளர்கள் இணைய தள சேவைகளை பயன்படுத்தி வேலை தேட, கட்டணங்கள் செலுத்த, தொடர்பு கொள்ள மற்றும் பயணச்சீட்டு முன் பதிவு செய்ய என பலவிதமான சேவைகளின் பயனை பெறுவர்.

- வாடிக்கையாளர்களின் சந்தேகங்களுக்கும் கேள்விகளுக்கும் அறிவார்ந்த பணியாளர்களைக் கொண்டு பதிலளித்து சில ஆலோசனைகளையும் கொடுத்து தீர்த்து வைக்கலாம்.

- வாடிக்கையாளர்களின் நன்மைக்காக கணினியின் முன் 'A' முதல் 'Z' வரையிலான கலைச்சொற்களை அதன் சுருக்கத்துடனும், இணையதள இங்கிதத்தையும் மற்றும் பிரயோகத்திலுள்ள இணைய தள சட்டங்களையும் குறித்து ஒட்டி வைக்கலாம்.

- உங்கள் வாடிக்கையாளர்களுக்கு கணினியின் அடிப்படை கருத்துகளையும் திறனையும் கற்பிக்கும் உடன் நிகழ் படிப்புகளைப் பற்றிய முழு தகவல்களையும் அளிக்கலாம்.

**பயனுள்ள ஆலோசனைகள்**

புதிய வாடிக்கையாளர்களை கவரும் வண்ணம் புதுமையான செயல்முறைகளை ஏற்பாடு செய்யலாம். உதாரணமாக,

- மதிய நேரங்களில் இல்லத்தரசிகளுக்காக இணைய தளத்தை பற்றிய சிறப்பு படிப்புகளை ஏற்பாடு செய்து அவர்களுக்கு சமையல் பற்றிய வலை தளங்களையும் அல்லது குழந்தைகள் வீட்டுப்பாடம் செய்வதற்கு துணை நிற்க உதவும் வளை தளங்களை பற்றியும் அவர்களுக்கு அறிமுகப்படுத்தலாம்.

- அப்பகுதியில் உள்ள மூத்த குடிமக்களை அழைத்து, இணைய தள சேவை அவர்களுக்கு எந்த வகையில் பயன்படும் என்பதை பற்றி கலந்துரையாடலாம். மூத்த குடிமக்களுக்காக சிறப்பு பிரிவுகளை நடத்தி அவர்களுக்கு ஆர்வம் மற்றும் பயன்பாடு உள்ள தகவல்களை அறிய உதவும் வலை தளங்களைப் பற்றி கற்பிக்கலாம்.

**தொழில் முனைவோர் மற்றும் தொழில் முறையாளர் :**

இன்றைய தினம் பல தொழில் முறையாளர்கள் வீட்டில் இருந்தபடியே வர்த்தகம் செய்து இணையதள விடுதி மூலம் தொடர்பு கொள்கிறார்கள். இப்பகுதியை சேர்ந்த வாடிக்கையாளர்கள் அவர்களின் வர்த்தகத்தின் எந்த ஒரு தேவைக்கும் இணையதள விடுதியை பயன்படுத்திக்கொள்ளலாம். இவர்கள் வியாபார திட்டம் தீட்டவும், அவர்களின் வாடிக்கையாளர்களிடம் தொடர்பு கொள்ளவும், வியாபார பொருட்களை தயாரிக்கவும் அல்லது அச்சேற்றுதல், நகலெடுத்தல் மற்றும் தொலை நதல் எடுத்தல் போன்ற வர்த்தக தொடர்பான அனைத்து செயல்பாடுகளையும் நிறைவேற்ற இணையதள விடுதியை பயன்படுத்திக்கொள்ளலாம்.

**கீழ்க்கண்டவற்றை வழங்குவதன் மூலம் தொழில் முனைவோர் மற்றும் தொழில் முறையாளர்களை கவரலாம்**

- தொழில் முறையாளர்களுக்காக உங்கள் இணைய தள விடுதியில், அதிவேக இணையதள இணைப்பையும், வடமில்லா அச்சுப்பொறியையும் கொண்ட அலுவலக பகுதியை உருவாக்க வேண்டும்.

- உங்கள் விடுதியின் ஒரு பகுதியில் இருந்தோ அல்லது அருகில் உள்ள இல்லங்கள் மற்றும் அலுவலகங்களிலிருந்தோ, கடவுச்சொல் மூலம் பாதுகாக்கப்பட்ட வை-பை மண்டலங்களை அணுகுவதற்கான வசதிகளை உருவாக்க வேண்டும்.

- வாடிக்கையாளர்கள் வசதியாக வேலை செய்வதற்கும், அவர்களின் வாடிக்கையாளர்களை சந்திப்பதற்கும் அவர்களின் வர்த்தகத்தை நிர்வகிப்பதற்குமான ஒரு தொழில் முறை சார்ந்த சூழலை உருவாக்க வேண்டும்.

- வாடிக்கையாளர்கள், வியாபார தயாரிப்புகளாகிய பதாகைகள், கையேடுகள், துண்டு பிரதிகள், வர்த்தக கடிதங்கள், வியாபார அட்டைகள் போன்றவற்றை தொழில் முறை தோற்றம் தரும் வகையில் உருவாக்க சுலபமாக பயன்படுத்தத் தக்க முன்வடிவுகளையும் ஆயத்த படங்களையும் வழங்க வேண்டும்.

- சான்றிதழ் திட்டங்களை வழங்கி வாடிக்கையாளர்களையும் அவர்களின் பணியாளர்களையும் மென்பொருள் உற்பத்தியில் திறமை உள்ளவர்களாக மாற்ற முடியும்.

- அச்சேற்றுதல், நகலெடுத்தல், தொலை நகலெடுத்தல், பிணைத்தல்(பைண்டிங்), வருடுதல்(ஸ்கேன்) போன்ற வியாபார சேவைகளை வழங்கலாம்.

- அலுவலக பொருட்களான குறுந்தட்டு(CD),எண்ணியல் ஒளித்தோற்ற வட்டு(DVD), பேனா இயக்கி (Pen drive), நினைவக அட்டைகள் மற்றும் அட்டை படிப்பி போன்றவற்றை வழங்குதல்.

**பயனுள்ள ஆலோசனைகள்**

உள்ளூரில் உள்ள மற்றும் பயணம் செய்யும் தொழில் முறையாளர்களுக்கு அவர்களின் வர்த்தக தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, அண்மைக் காலத்திய மென்பொருளுடன் இணைய தளத்தை அணுகும் வசதிகளுடனான மடிக்கணினிகளை வாடகைக்கு கொடுக்கலாம்.

**<u>பொழுது போக்கை நாடுபவர்கள் :</u>**

இவ்வகை வாடிக்கையாளர்கள் இணைய தள விடுதிகளை, திரைப்படம் பார்க்க, இசை கீழிறக்கம் செய்ய, வலைதளத்தை பார்க்க, புகைப்படங்களை பதிப்பிக்க பகிர்ந்து கொள்ள, நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் தொடர்பு கொள்ள, அரட்டை அடிக்க, வலைப்பதிவு செய்ய, மட்டுமே பயன்படுத்துகிறார்கள். இவ்வகை வாடிக்கையாளர்கள் பல்வகை ஊடகங்களை கீழிறக்கம் செய்ய, அதிவிரைவு இணையதள வசதிகளை உடைய வேகமான கணினிகளுக்கே முன்னுரிமை தருகிறார்கள்.

**கீழ்க்கண்டவற்றை வழங்குவதன் மூலம் பொழுது போக்கை நாடுபவர்களை கவரலாம்**

- பிரபல பாடல்கள், திரைப்படங்கள், அழைப்பு ஒலிகள், ஒளித்தோற்ற காட்சிகள், திரைக்காப்புகள் மற்றும் செல்லிடபேசிக்கான மென்பொருள் போன்றவற்றை கீழிறக்கம் செய்வதற்கு உதவி செய்ய வேண்டும்.
- உடனடி செய்திகள் அனுப்பவும், மின்னஞ்சல் வசதியை பயன்படுத்தவும் சுலபமான முறையில் ஒவ்வொரு படியாக வழிமுறைகளை அளிக்கலாம்.
- நீங்கள் முன்னரே கீழிறக்கம் செய்து வைத்திருக்கும் கோப்புகளை வாடிக்கையாளர்களுக்கு தேவைப்படும் நேரத்தில் அவர்களுடைய செல்லிடபேசிக்கு மாற்றி கொடுத்து அதற்கான கட்டணத்தை வசூலிக்கலாம்.

- ஒலி ஒளி கலந்தாய்வுக்கான அமைதியான இடம்
- புகைப்படங்களை பதிப்பிக்க, வருட(ஸ்கேன் செய்ய) மற்றும் அனுப்புவதற்கு உதவலாம்

இவ்வகை வாடிக்கையாளர்களுக்காக, உங்கள் விடுதியில் சில சாதனங்களை வழங்கலாம்.

**கீழிறக்கம் செய்ய** : USB துறை, தரவு வடம், நினைவக படிப்பி மற்றும் செல்லிட பேசி மென்பொருள்
**ஒலி ஒளி கலந்தாய்வு** : வலைதள புகைப்பட சருவி, நடப்பு சேவைகள், செய்தி செலுத்தி
**புகைப்பட பதிப்பி** : ஒலி ஒளி உணர் வடங்கள் மற்றும் மாற்றிகள், பதிப்பிக்கும் கருவிகள், ஊடக இயக்கி அல்லது வேறு ஏதாவது மென்பொருள் (பிக்சர் மேனேசர், மூவி மேக்கர், விஷீவல் ஸ்டுடியோ)

**பயனுள்ள ஆலோசனைகள்**

சுதந்திரமான பத்திரிக்கையாளர்களுக்கும் ஊடக நபர்களுக்கும் புகைப்பட பதிப்பிற்கென பிரத்யேக இடமும், புகைப்பட வருடுதலுக்கென தனி இடமும் ஒதுக்கி தரலாம். ஒலி ஒளி காட்சிகளை பதிப்பிக்கவும் அனுப்பவும் உதவும் மென்பொருட்களை ஆர்வமுள்ள பத்திரிக்கையாளர்களுக்கும் ஊடக நபர்களுக்கும் வழங்கலாம்.

**<u>கணினி விளையாட்டு ஆர்வலர்கள் :</u>**

விளையாட்டு ஆர்வலர்கள் இணைய தள விடுதிக்கு தனியாகவோ அல்லது நண்பர்களுடன் இணைந்தோ விளையாட வருவார்கள். அமைதியான சூழலும் வேகமான கணினியும் இருந்தால், நீண்ட நேரம் தங்கியிருந்து விளையாடவும், மின்னஞ்சல் அனுப்பவும், இணையத்தில் அரட்டை அடிக்கவும், ஊடகங்களை பார்க்கவும் அவர்களை தூண்டும். இவ்வகை வாடிக்கையாளர்கள் சமீபத்திய புதிய உபகரணங்களை வைத்திருக்கும் சுதந்திர எண்ணம் உடையவர்கள். விளையாட்டு ஆர்வலர்களுக்கு, பொழுது போக்கு உற்சாகத்தை அளிக்கும் என்றாலும் இணைய தள விடுதியில் அளிக்கப்படும் சமூக மதிப்பையும் அவர்கள் விரும்புவார்கள்.

**கீழ்க்கண்டவற்றை வழங்குவதன் மூலம் கணினி விளையாட்டு ஆர்வலர்களை கவரலாம்**

- பிரபல விளையாட்டுகளை விளையாடுவதற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.
- அவர்கள் நண்பர்களுடன் கூடி மகிழ்ந்து வேகமான விளையாட்டுக்களை இரசித்து விளையாடுவதற்கு தனியாக விளையாட்டு மண்டலத்தை உருவாக்கலாம். வழக்கமாக, விளையாடுமிடம் சத்தமாக இருக்கும் என்பதால் இவ்வகை வசதி செய்யும்போது மற்ற வாடிக்கையாளர்கள் பாதிக்கப்படாமல் இருக்க உதவிகரமாக இருக்கும்.
- பல ஆட்டக்காரர்கள் பங்கேற்கும் விளையாட்டு பந்தயங்களை நடத்தி, பரிசு பெற்றவர்களின் விவரங்களை தகவல் பலகையில் தெரிவித்தால், அனைவரும் பந்தயத்தில் கலந்து கொள்ள உற்சாகமாக இருக்கும்.
- அழைப்பு ஒலிகள், பிரபல விளையாட்டு ஒளித்தோற்ற காட்சிகள், திரைக்காப்புகள் போன்றவற்றை சுலபமாக செல்லிடபேசிக்கு கீழிறக்கம் செய்யலாம்.
- சமீபத்திய தயாரிப்புகளை வெளிப்படுத்தும் விளையாட்டு பட்டறைகளை நடத்தலாம். ஊள்ளூரில் விளையாட்டுக்கான மென்பொருள் உருவாக்குபவர்களை அழைத்து வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் தயாரிப்புகளை பற்றி செய்து காட்டச் சொல்லலாம்.

**சாதனங்கள்**

விளையாட்டு இயந்திரங்கள், விளையாட்டு கருவிகள் (தேவை இருந்தால்)

**பயனுள்ள ஆலோசனைகள்**

உங்கள் பகுதியில் தேவை இருந்தால், விளையாடுவதற்காக பெரிய திரை கொண்ட தொலைக்காட்சி பெட்டி, உயர்தரமான ஒலி அமைப்புகள், பிரத்யேகமான விளையாட்டு மென்பொருள் மற்றும் வன்பொருளுடன் திரையரங்க தோற்றத்தை தரக்கூடிய பிரத்யேகமான விளையாட்டு மண்டலத்தை உருவாக்கலாம்.

விளையாட்டு பந்தயங்களையும் போட்டிகளையும் முன்னிரவு நேரங்களில் குறிப்பாக வார இறுதி நாட்களில் நடத்தலாம்.

**சிறந்த விளையாட்டு இயந்திரங்களின் வடிவம் கீழ்க்கண்டவாறு இருக்க வேண்டும்.**

- குறைந்தது பென்டியம் 4 அல்லது AMD 1.8 GHz செயலகத்துடன் 1GB / 2 GB வன் தட்டு

- 256 MB NVIDIA GeForce 6800 கிராபிக்ஸ் வடம் மற்றும் 22- அங்குல கணினி திரை.

- ஒலி கேட்க காதில் அணியும் கருவி, ஒலிவாங்கி

<u>மாணவர்கள் :</u>

அனைத்து வயதை உடைய மாணவர்களும், மின்னஞ்சல் செலுத்தவும், ஆய்வு செய்யவும், அறிக்கை தயாரிக்கவும், கருத்துகளை பகிரவும் புதிய திறமைகளை கற்கவும், வேலை வாய்ப்புகளை தேடவும் இணைய தளத்திற்கு அடிக்கடி வருகிறார்கள். அனைவருடனும் தொடர்பில் இருக்கவும், பிறருடன் விரும்பிப் பழகுவதற்கும், பொழுது போக்கவும், இசை கோப்புகளை கீழிறக்கம் செய்வதற்காகவும் இணைய தளத்தை நாடி வருகிறார்கள்

**கீழ்க்கண்டவற்றை வழங்குவதன் மூலம் மாணவர்களை கவரலாம்**

- பிரபல பாடல்கள், திரைப்படங்கள், அழைப்பு ஒலிகள், ஒளித்தோற்ற காட்சிகள், திரைக்காப்புகள் மற்றும் செல்லிடபேசிக்கான மென்பொருள் போன்றவற்றை கீழிறக்கம் செய்வதற்கு உதவி செய்ய வேண்டும்.

- சுயகுறிப்பு மற்றும் மேலுறை கடிதங்களுக்கான முன்வடிவுகளை தயார் செய்வதுடன் வேலை தேடுவோர்க்கான உடன்நிகழ் வேலை தரும் இணைப்புகளையும் தேடி தரலாம்.

- கல்வி சம்பந்தமான மெனபொருளையும் வலைதளங்களுக்கான விரைவு இணைப்புகளை அணுக வசதி செய்தல்.

- பள்ளி நேரத்திற்கு பின்னாலான கல்விக்கு/தனி பயிற்சிக்கு பல பாடங்களிலும் உடன்நிகழ் வகுப்புகள் வழங்குதல்.

- நெரிசல் இல்லாத நேரங்களில் மாணவர்களுக்கு சலுகை வழங்குதல்.

- மாணவர்கள் பல மொழிகளையும் கற்க உங்கள் கணினியில் பல மொழி இடைமுக(interface) தொகுப்புகளை ஏற்றலாம்.

**பயனுள்ள ஆலோசனைகள்**

- அருகில் உள்ள பள்ளிகளுடன் இணைந்து மாணவர்களுக்கான அடிப்படை இணையதள வகுப்புகளை அல்லது உடன்நிகழ் தனிபயிற்சி வகுப்புகளை அளிக்கலாம். ஈதனால் மாணவர்கள் வீட்டுப் பாடங்களை சொந்த கணினி இல்லாமல் முடிப்பதோடு கணினி பற்றிய அறிவையும் பெறுகிறார்கள்.
- மாணவர்கள் அவர்களுக்கு வேண்டிய ஆதாரங்களை விரைவாக பெற கல்விக்கான வலைதளங்களை வாசிப்புக் குறியிட்டு உதவலாம்.

<u>மென்பொருள் உருவாக்குபவர்கள் :</u>

இவர்கள் பல்ஊடகங்களுக்கு இடையே ஊடாடும் பயன்பாடுகள் மற்றும் வலை தீர்வுகளையும் உருவாக்க பயன்படும் உபகரணங்களை தேட இணைய தள விடுதியை நாடுகின்றனர்

**கீழ்க்கண்டவற்றை வழங்குவதன் மூலம் மென்பொருள் உருவாக்குபவர்களை கவரலாம்**

- சமீபத்திய உருவாக்க பயன்பாடுகளையும், கருவிகளையும் தேடுதல்.
- ஆதரவு மற்றும் உதவி பெற்ற கணினிகளையும் மென்பொருளையும் வழங்குதல்.
- உள்ளூரில் உள்ள மென்பொருள் உருவாக்குபவர்களை ஒன்று சேர்க்கும் சமூக குழுக்களை வழங்குதல்.

**பயனுள்ள ஆலோசனைகள்**

உங்கள் வாடிக்கையாளர்களுக்கு, வலைதளத்தை வடிவாக்கம் செய்வதற்கும் பராமரிப்புக்குமான சேவை செய்ய உங்கள் பகுதியை சார்ந்த மென்பொருள் உருவாக்குபவர்களின் விவரங்களை தந்து விளம்பரப்படுத்தலாம். இம் மதிப்பு மிக்கச் சேவையை செய்வதால் நீங்கள் உங்கள் வாடிக்கையாளர்களுக்கு உதவுவதோடு(கவர்வதோடு) மென்பொருள் உருவாக்குபவர்களும் வருமானம் பெறும் வாய்ப்பைத் தருகிறீர்கள்.

நீங்கள், உங்கள் பகுதியை சார்ந்த மென்பொருள் உருவாக்குபவர்களை அழைத்து உங்கள் விடுதியிலேயே மென்பொருள் உருவாக்க கற்பிக்கும் வகுப்பினை நடத்தச் சொல்லலாம். இதனால், நீங்கள் புதிய மற்றும் கூடுதல் வாடிக்கையாளர்களை பெறுவதற்கு உதவிகரமாக இருக்கும்.